சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டணம் வட்டாரம்

சுக்கம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை – திரு.பி.முருகன்

நாள். 02.01.2024

பொருள்– மனைப்பிரிவு – சேலம் மாவட்டம் – அயோத்தியாப்பட்டணம் வட்டாரம் – சுக்கம்பட்டி ஊராட்சி – சுக்கம்பட்டி ஊராட்சி சர்வே எண்.108/1ஏ 109/2ஏ, 109/3ஏ ல் உள்ள 4.80 ஏக்கர் பரப்பளவு (அ) 19430.00 ச.மீட்டரில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரன்முறை செய்து உத்தரவிடல் –சார்பு.

பார்வை–

1. அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 04.05.2017
2. அரசாணை எண். 18 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UDE4)த்துறை நாள் 04.05.2019
3. அரசாணை எண். 18 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UDE3)த்துறை நாள் 04.06.2004
4. உதவி இயக்குநர், சேலம் மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம் அவர்களின் ந.க.எண்.SLM/3KJKOYGF/16101/2023/TCP, நாள்.11.12.2023
5. திருமதி.ஆர்.சுசீலா க/பெ.ராஜா, கதவு எண்.4/468, அன்னை இல்லம், அய்யன் நகர், முதல் குறுக்கு மேற்கு, கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமம், சேலம் – 636 008

உத்தரவு –

பார்வை 4 – ல் கண்ட உதவி இயக்குநர், சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அனுமதி கடிதத்தின்படி , சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டணம் ஒன்றியத்திற்குட்பட்ட சுக்கம்பட்டி ஊராட்சியில் சுக்கம்பட்டி கிராம ஊராட்சி சர்வே எண்.108/1ஏ 109/2ஏ, 109/3ஏ ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு சேலம் மாவட்ட, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் சில நிபந்தனைகளின்படி குடியிருப்பு மனை பிரிவிற்கான ம.வ / மோ.எண் SLM/3KJKOYGF/16101/2023/TCP, நாள்.11.12.2023 என்ற எண்ணிட்டப்பட்டு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. மேலும், சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டணம் வட்டாரம், சுக்கம்பட்டி ஊராட்சி சர்வே எண்.108/1ஏ 109/2ஏ, 109/3ஏ ல் உள்ள 4.80 ஏக்கர் பரப்பளவு (அ) 19430.00 ச.மீட்டரில் உள்ள நிலமானது சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தால் வகைப்படுத்தபடாத (Unclassified Area) பகுதியில் அமைகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமையும் இடத்திற்கு மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டு சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டு பார்வை 1 ல் காணும் அரசாணையின்படி மேற்கண்ட இடத்திற்கு 3 % மார்கெட் மதிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.என தெரிவித்ததின்படி மனுதாரர் கீழ்கண்ட கணக்கு தலைப்பில் பின்வருமாறு கட்டணம் செலுத்தியுள்ளார்.

மனையிட ஒப்புதல் கட்டணம் ரூ.4800/–, நாள். 27.12.2023

0217 – Urban Development – 60 Other Urban Development Scheme – 800 other Receipts – AS Receipt under land use conversation – 27 Non Taxation fees – 09 Collections. D.P.C – 02717-60-800-AS-2790	சலான் மூலம் அரசு தலைப்பில் செலுத்தப்பட்டது. சலான் / தேதி

வளர்ச்சி கட்டணம் அனுமதியற்ற மனைப்பிரிவு வரைமுறைப்படுத்தல் கணக்கு எண்.

மேற்படி அயோத்தியாப்பட்டணம் வட்டாரம், அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியம், சுக்கம்பட்டி ஊராட்சி சர்வே எண்.108/1ஏ 109/2ஏ, 109/3ஏ ல் உள்ள 4.80 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மனைபிரிவினை சுக்கம்பட்டி ஊராட்சி மன்றம் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இச்சர்வே எண்ணில் அமையும் மனைபிரிவினை வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள்

1. பார்வை 4 – ல் காணும் உதவி இயக்குநர், சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களின் உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டும்.
2. உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றியமைக்க கூடாது.
3. ஒப்புதல் வழங்கப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. அபாயகரமான மற்றும் அருவருக்கதக்க தொழிற்சாலை ஏதும் ஏற்படுத்த அனுமதியில்லை.
4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து செலுத்த வேண்டி இருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்பட்டால் உரிய தொகையினை மனுதாரர் செலுத்த வேண்டும்.
5. அரசின் கொள்கை அளவிலான மனை ஒப்புதலும், அரசு மாற்றம் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவர் ஆவார்.
6. பத்திர பதிவு மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கபட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுபட்டவர் ஆவார்.
7. திறந்தவெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக மனுதாரரால் விற்பனை செய்யப்பட் உள்ள மனை நிலங்களுக்கான உயர் அழுத்த / சாதாரண மின் அழுத்த மின்சார பாதை (லைன்) அமைத்து மின் வசதி செய்து கொள்ள அனுமதி இல்லை
8. விற்பனை செய்யப்படாத ஒவ்வொரு மனைப்பிரிவும், பத்திரவு செய்யும்போது மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திர பதிவு செய்திட வேண்டும்.

9. மேற்குறிப்பிட்ட நிபந்தனையை மீறினாலோ, மனுதாரரால் அளிக்கப்பட்ட விபரங்கள் சரியானவை அல்ல என்று ஏதேனும் பின்னர் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இம்மனை ஒப்புதல் முன்னறிவிப்பு இன்றி இரத்து செய்ய ஏதுவாகும் என அறிவிக்கப்படுகிறது.

இணைப்பு – வரைபடம்

பெறுதல்

திருமதி.ஆர்.சுசீலா க/பெ.ராஜா,
கதவு எண்.4/468,
அன்னை இல்லம், அய்யன் நகர்
முதல் குறுக்கு மேற்கு,
கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமம்,
சேலம் – 636 008

P. Kumaran.
தலைவர்,
சுக்கம்பட்டி ஊராட்சி மன்றம்
அயோத்தியாபட்டணம் ஒன்றியம்
சேலம் Tk

நகல் –

உதவி இயக்குநர், சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல் – சார் பதிவாளர்

நகல் – வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), அயோத்தியாப்பட்டணம்.

சுக்கம்பட்டி ஊராட்சி மன்றம் அயோத்தியாபட்டணம் (ஒன்றியம்) சேலம் Tk.